**அனுப்புநர்** **பெறுநர்**

தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – **600 006.**

செய்தி ஆசிரியர்,

**ந.க.எண்.000080/எப்1/2019** **நாள் : 06.05.2019**

**அய்யா / அம்மையீர்,**

**பொருள் :** மேல்நிலை முதலாம் ஆண்டு **(+1)** பொதுத்தேர்வு, மார்ச் **2019** – தேர்வு முடிவு வெளியிடப்படவுள்ள இணையதள முகவரிகள் – விடைத்தாள் நகல், மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பதற்கான நாட்கள் – செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

-----

06.03.2019 முதல் **22**.03.2019 வரை நடைபெற்ற மார்ச் **2019** மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்படவுள்ள இணையதள முகவரிகள், விடைத்தாள் நகல்/ மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பதற்கான நாட்கள் குறித்த தகவல்கள் அடங்கிய செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பினை மாணாக்கர்/தேர்வர் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி தங்கள் நாளிதழில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடும்படி கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இது விளம்பரம் அல்ல.

**இணைப்பு:**
செய்திக்குறிப்பு

தங்கள் நம்பிக்கையுள்ள.
ஒம்/–
**இயக்குநர்**

**<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.</u>**

**<u>மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு, மார்ச் 2019</u>**
**<u>தேர்வு முடிவுகள் வெளியிடுதல், விடைத்தாள் நகல் மற்றும்</u>**
**<u>மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தல் – செய்திக் குறிப்பு</u>**

நடைபெற்ற மார்ச் **2019** மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதிய பள்ளி மாணாக்கர் மற்றும் நேரடித் தனித்தேர்வர்களின் தேர்வு முடிவுகள் **08.05.2019 (புதன்கிழமை) அன்று காலை 9.30 மணிக்கு** வெளியிடப்படுகிறது. தேர்வர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி, மாதம், வருடத்தினைப் பதிவு செய்து, தேர்வு முடிவுகளை மதிப்பெண்களுடன் கீழ்க்குறிப்பிட்டுள்ள இணையதளங்கள் வழி அறிந்து கொள்ளலாம்.

www.tnresults.nic.in
www.dge1.tn.nic.in
www.dge2.tn.nic.in

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் தேசிய தகவலியல் மையங்களிலும் (National Informatics Centre), அனைத்து மைய மற்றும் கிளை நூலகங்களிலும் கட்டணம் இன்றி தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

மேலும், பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும் மதிப்பெண்களுடன் கூடிய தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

**பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதிமொழிப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள கைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தியாக தேர்வு முடிவு அனுப்பப்படும். தனித்தேர்வர்களுக்கும், ஆன்–லைனில் விண்ணப்பிக்கும்போது வழங்கிய கைபேசி எண்ணிற்கு தேர்வு முடிவுகள் குறுஞ்செய்தியாக (SMS) அனுப்பப்படும்.**

**மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதிய தேர்வர்களுக்கு இணையதளம் வழியாக மதிப்பெண் பட்டியல் (Statement of marks) வழங்கப்படும். அரசுத் தேர்வுத் துறையால் அச்சடிக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் (Printed Mark Certificate) வழங்கப்படும் வரை மட்டுமே இம்மதிப்பெண் பட்டியல் செல்லும்.**

**14.05.2019 (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் முதல்** தேர்வர்கள் தாங்கள் பயின்ற பள்ளி/ தேர்வெழுதிய தேர்வு மையத்தின் தலைமை ஆசிரியர் வழியாக தங்களது மதிப்பெண் பட்டியலை (Statement of marks) பெற்றுக் கொள்ளலாம். மேலும் **16.05.2019 (வியாழக்கிழமை) பிற்பகல் முதல்** பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்கள் தங்களுக்கான மதிப்பெண் பட்டியலை தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகிய விவரங்களை அளித்து **<u>www.dge.tn.nic.in</u>** என்ற

2...

இணையதளத்தில் தாங்களே பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். **மதிப்பெண் பட்டியலில், (Statement of marks) பள்ளி மாணாக்கர்களுக்கு சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமையாசிரியரும், தனித்தேர்வர்களுக்கு தேர்வெழுதிய தேர்வு மையத்தின் பள்ளித் தலைமையாசிரியரும் சான்றொப்பமிட்டிருந்தால் மட்டுமே மதிப்பெண் பட்டியல் (Statement of marks) செல்லும் (Valid).**

**விடைத்தாள் நகல் மற்றும் மதிப்பெண் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:**

விடைத்தாள் நகல் மற்றும் மதிப்பெண் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் வழியாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வழியாகவும் **10.05.2019 (வெள்ளிக்கிழமை) பிற்பகல், 11.05.2019 (சனிக்கிழமை) மற்றும் 13.05.2019 (திங்கட்கிழமை) ஆகிய நாட்களில் விண்ணப்பிக்கலாம்.**

தேர்வர்கள் தங்களுக்கு விடைத்தாளின் நகல் தேவையா அல்லது மதிப்பெண் மறுகூட்டல் செய்ய வேண்டுமா என்பதை முன்னரே தெளிவாக முடிவு செய்து கொண்டு அதன் பின்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விடைத்தாளின் நகல் பெற்றவர்கள் மட்டுமே விடைத்தாள் மறுமதிப்பீடு கோரி பின்னர் விண்ணப்பிக்க இயலும்.

விடைத்தாளின் நகல் கோரி விண்ணப்பிப்போர், அதே பாடத்திற்கு மதிப்பெண் மறுகூட்டலுக்குத் தற்போது விண்ணப்பிக்கக் கூடாது. விடைத்தாளின் நகல் பெற்ற பிறகு அவர்கள் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு அளிக்கப்படும்.

**விடைத்தாளின் நகல் (Copy of the answer script) பெறுவதற்கான கட்டணம் :**

| | | |
|---|---|---|
| பாடம்<br>(ஒவ்வொன்றிற்கும்) | – | **ரூ.275/–** |

**மறுகூட்டல் (Retotalling) கட்டணம்**

| | | |
|---|---|---|
| உயிரியல் பாடத்திற்கு மட்டும் | – | **ரூ.305/–** |
| ஏனைய பாடங்கள்<br>(ஒவ்வொன்றிற்கும்) | – | **ரூ.205/–** |

**பணம் செலுத்தும் முறை :**

விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கான கட்டணத்தை விண்ணப்பிக்கவுள்ள பள்ளியிலேயே பணமாகச் செலுத்த வேண்டும்.

**<u>விடைத்தாள் நகல் – இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளுதல் :</u>**

அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவிக்கும் நாட்களில், தேர்வர்கள் தங்களது விடைத்தாளின் நகலினை இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்துக் கொள்ள வேண்டும்.

**<u>மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்பு துணைத் தேர்வு, ஜூன் 2019 :</u>**

மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாதோருக்கும் / வருகை புரியாதோருக்கும் நடத்தப்படும் ஜூன் **2019** மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்பு துணைத்தேர்வு **14.06.2019** முதல் **21.06.2019** வரையிலான நாட்களில் நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் முறை மற்றும் விண்ணப்ப தேதிகள் குறித்து விரைவில் தனியே அறிவிப்பு வெளியிடப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

நாள் : **06.05.2019**
**இடம் :** சென்னை – **600 006.**

**<u>நகல்</u> :**

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.